# தமிழ் வலைப்பதிவுகள்; நேற்று இன்று நாளை

ச.செந்தில்வேலன்

மக்களின் வாழ்க்கைமுறைக்கும் கருத்துச் சுதந்திரத்துக்கும் எவ்வளவு தொடர்பு இருக்கிறதோ , அதே அளவு கருத்துப் பறிமாற்றத்துக்கும் தொழில்நுட்ப வளர்ச்சிக்கும் தொடர்பிருக்கிறது. ஒவ்வொரு காலகட்டத்திலும் மக்கள் தங்கள் எண்ணங்களைப் பறிமாறிக்கொண்ட விதத்தைப் பார்வையிட்டாலே தொழில்நுட்ப வளர்ச்சியையும் கணக்கிடலாம்.

ஒற்றர்கள், புறாக்கள் மூலம் தொலைதூரங்களுக்கு சென்ற செய்திகள் , கடிதங்களுக்கு மாறின. கடிதங்களின் மூலமாகப் எண்ணங்களைப் பறிமாறிக் கொண்டதைத் தொலைபேசியும் மின்னஞ்சலும் மாற்றியமைத்தது. தனி நபர் கருத்துப் பறிமாற்றத்தில் ஏற்பட்ட மாற்றம் ஊடகங்களிலும் ஏற்பட்டது தொழில்நுட்பத்தால் தான்!




செய்தித்தாள்கள் மற்றும் வார இதழ்களில் வெளியான கருத்துகள் பெரும்பாலும் ஒருவழிப்பாதையாகவே இருந்தன . அந்நிலை மாற ஆரம்பித்திருப்பது தொழில்நுட்ப வளர்ச்சியால் தான் . முன்பு, வார இதழ்களைப் படித்துவிட்டு கருத்துக்களை அனுப்பினாலும் வெளியாவது என்னவோ ஆயிரங்களில் ஒருவருடையதாகத்தான் இருந்தது . இணையங்களின் வருகைக்குப் பிறகு நாளிதழ்கள் , வார இதழ்களின் கருத்துகளுக்கு நூற்றுக்கணக்கானோர் பதிலளிக்கும் நிலை வந்துள்ளது. ஆனால், நம் கருத்துகள் பத்திரிகைகளின் கொள்கைக்குப் புறம்பாக இருந்தால் நம் கருத்துகள் வெளியாகாமல் கூட போகும்.

நம் கருத்துகளை நமக்கான ஒரு தளத்தில் பதிவு செய்தால் என்ன ? நமக்கென ஒரு தளம் இருந்தால் நம் கருத்துகளை எண்ணங்களை வெளியிடலாம் தானே!

அந்தத் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் உருவானதே ப்ளாக் (BLOG) என்றழைக்கப்படும் வலைப்பதிவுகள். WEB+ LOG -> WEBLOG -> BLOG

இணையத்தில் குறிப்புகள் / எண்ணங்களைப் பதிவு செய்ய உதவும் தளங்களே பதிவுத் தளங்கள் . 2000-ல் ஆரம்பிக்கப் பட்ட பதிவுத்தளங்கள் இன்று உலகெங்கும் பரவியுள்ளன. இப்படிப் பதிவுகளை வெளியிடும் வசதியைத் தரும் பிளாகர் (Bl ogger ) என்ற தளம் மக்களின் செல்வாக்கைப் பெற்றுள்ளது. உலகெங்கும் உள்ள முதல் 10 செல்வாக்கான தளங்களான கூகுள், ஃபேஸ்புக், யூ-டியூப், யாஹூ, விண்டோஸ் லைவ், விக்கிப்பீடியா, பைடு, பிளாகர், எம்.எஸ்.என், டிவிட்டர் போன்றவற்றுள் பிளாக்கருக்கும் இடமிருப்பது வலைப்பதிவுகளின் செல்வாக்குக்குச் சான்று.



பதிவுத் தளங்களுள் வெளியிடப்படும் கட்டுரைகள் , கவிதைகள், சிறுகதைகள், புகைப்படங்கள், காணொளிகள் என யாவும் வலைப்பதிவுகள் என்றே அழைக்கப்படுகின்றன. நாம் அன்றாடம் காணு ம் விசயங்கள், மனதை பாதித்த சம்பவங்கள் , மனதில் எழும் கற்பனைகள் , சமூகத்துக்குத் தேவையான சிந்தனைகள், உலகில் நிகழும் மாற்றங்கள் என அனைத்தையும் பதிவாக வெளியிடலாம் . ஆரம்பத்தில் ஆங்கில எழுத்துருவைக் கொண்ட மொழிகளில் மட்டுமே பதிவிட முடிந்தது ஆறேழு வருடமாக பெரும்பாலான மொழிகளிலும் வெளியிடும் நிலை வந்துள்ளது.

## பதிவுகளை எங்கே எழுதுவது? அதற்கு என்ன தேவை?

பதிவுத்தள சேவையை பிளாகர் (www.Blogger.com), வேர்ட்ப்ரஸ் (www.wordpress.com) போன்ற நிறுவனங்கள் இலவசமாக வழங்குகின்றன . இச்சேவையை நாம் பயன்படுத்தத் தேவையானது ஒரு பயனர் கணக்கு மட்டுமே. பயனர் கணக்கைத் துவக்கிக் கொண்டால் எளிய முறையில் பதிவுகளை வெளியிட ஆரம்பிக்கலாம் . இச்சேவைகளைப் பயன்படுத்துவது எப்படி என்பது இணைய தளங்களில் தேடினாலே கிடைக்கின்றன.

பதிவுகளைத் தமிழில் எழுதலாம் என்று முடிவு செய்தாயிற்று . தமிழ் தட்டச்சுவதற்கான மென்பொருள் எங்கே கிடைக்கும்?

இதுவும் இணைய தளங்களில் இலவசமாகக் கிடைக்கின்றன. ஈ-கலப்பை (e-Kalappai), என்.எச்.எம்.ரைட்டர் (nhm writer - http://software.nhm.in/) போன்ற மென்பொருள்களை தங்கள் மடிக்கணினியிலோ, மேசைக் கணினியிலோ நிறுவினாலே போதுமானது. இதை நிறுவுவது மிகவும் எளிதானதே. அதில் கூறப்பட்டுள்ள விசயங்களைப் படித்தாலே எளிதாக நிறுவிக்கொள்ளலாம். தமிழில் தட்டச்சுவதற்கு தமிழ் தட்டச்சு படித்திருக்க வேண்டியதில்லை. ஆங்கிலக் விசைப்பலகையைக்(Key Board) கொண்டே எளிதில் தட்டச்சலாம். அம்மா என்ற அடிக்க ammaa என்று அடித்தால் போதும்.




அல்லது கூகுள் டிரான்ஸ்லிட்ரேட் தளத்துக்குச் சென்று (http://www.google.com/transliterate/) தமிழை தேர்ந்தெடுத்து டைப் செய்யலாம்.

## வலைப்பதிவுகள், திரட்டிகள், செய்தியோடைகள்...

பதிவுத் தளத்தைத் துவக்கியாயிற்று. நம் எண்ணங்களைப் பதிவுகளாக வெளியிடத் துவங்கி நம் நண்பர்களையும் நலம்விரும்பிகளையும் பார்க்கச் சொல்லலாம். வலைப்பதிவுகளை எழுதுபவரை பதிவர் என்ற வார்த்தையால் வழங்கிறார்கள்.

நம் கருத்துகளை ஓரளவு கோர்வையாக வெளியிட ஆரம்பித்த பிறகு இன்னும் பெரிய வாசகர் வட்டத்துக்குக் கொண்டு சென்றால் பலரும் நம் கருத்தைப் பார்வையிட நேரிடும். இதற்கு நமக்கு உதவுவதே வலைப்பதிவுகளை ஒருங்கிணைக்கும் திரட்டிகள் (Blog Aggregating Sites).

தமிழ்மணம் (www.tamilmanam.net), தமிழிஷ் (www.tamilish.com), தமிழ்வெளி (www.tamilveli.com)போன்ற தளங்களுள் ஒரு பயனர் கணக்கைத் துவக்கிக் கொண்டால் போதும், நம் வலைப்பதிவுகளைத் திரட்டிகளில் இணைத்துவிடலாம். திரட்டிகளில் இணைப்பதன் மூலம் உலகெங்கும் உள்ள

வாசகர்களின் பார்வைக்குக் கொண்டு செல்லலாம் . தமிழ் இணையதளங்களுள் பிரபல நாளிதழ்கள், வார இதழ்களுக்கு அடுத்தபடியாக அதிக வாசகர்கள் பார்வையிடுவது தமிழ்மணம் , தமிழிஷ் போன்ற தளங்கள் என்பதே திரட்டிகளின் செல்வாக்குக்கும் வலைப்பதிவுகளின் செல்வாக்குக்கும் சான்று.

நம் பதிவைத் திரட்டிகளின் மூலம் வாசகர்களின் பார்வைக்கு வைக்க முடிகிறது. மற்ற பதிவர்களின் பதிவை எப் படி நாம் தொடர்ச்சியாகப் படிப்பது? அதற்கு அந்தப் பதிவரை பிளாகர் மூலமோ , கூகுள் ரீடர் மூலமோ தொடர்ந்தால் போதுமானது . கூகுள் பயனர் கணக்கு வைத்திருக்கும் அனைவரும் கூகுள் ரீடர் (http://www.google.com/reader ) சேவையைப் பயன்படுத்தலாம் . கூகுள் ரீடர் மூலம் வலைப்பதிவுகள் மட்டுமல்ல செய்தியோடைகள் (RSS) வசதிகொண்ட அனைத்து தளங்களையும் நம் கூகுள் ரீடரில் சேர்த்து விடலாம் . அதன்மூலம் அந்தத் தளங்களில் கட்டுரைகள் வெளியானவுடனே நம் கூகுள் ரீடர் முகப்புக்கு வந்துவிடும்.

## தமிழ் வலைப்பதிவுகளின் இன்றைய நிலை...

தமிழில் பதிவுகளை நான் எழுத ஆரம்பித்தது கடந்த ஒன்றரை வருடங்களாகத் தான் . தமிழில் பதிவுகள் எழுதுகிறேன் என்ற காரணத்தினாலேயே உலகெங்கும் எனக்குக் கிடைத்திருக்கும் நண்பர்கள் ஏராளம். அதிலும், எனக்கு அமீரகத்தில் கிடைத்த நண்பர்களுக்கும் தொடர்புகளுக்கும் காரணம் தமிழில் பதிவெழுதுவதே.

பல தரப்பட்ட கருத்துகளையும் பார்வையிட ஒரு தளமாக தமிழ்ப் பதிவுலகம் மாறி வருவது கண்கூடு. அறிவியல், தொழில்நுட்பம், சமூகம், வரலாறு, இலக்கியம், சுற்றுச்சூழல், மருத்துவம், உடல்நலம் என 'தமிழில்' கட்டுரைகளும், கருத்துகளும் காணக்கிடைப்பது பதிவுலகில் அதிகம் . எந்த ஒரு நிகழ்வானாலும் உடனுக்குடன் அதைப் பற்றிய கட்டுரைகளை , கருத்துகளைப் பார்க்க முடிவது பதிவுலகின் பலம்.

இந்த நேரத்தில் தமிழ்ப் பதிவுலகில் வரும் படைப்புகள் , வாசகர்கள் எதிர்பார்ப்பு பற்றிக் கூறியாக வேண்டும். முந்தைய பத்தியில் கூறியிருந்தது போல அறிவியல் , தொழில்நுட்பம், சமூகம், வரலாறு, இலக்கியம், சுற்றுச்சூழல், மருத்துவம், உடல்நலம் பற்றியெல்லாம் கட்டுரைகள் காணக்கிடைத்தாலும் பெரும்பாலான படைப்புகள் சினிமா , கேளிக்கை சார்ந்ததாகவே இருக்கின்றன . பதிவுலக வாசகர்களின் செல்வாக்கு ம் அவற்றுக்கே அதிகமாக உள்ளது.

அறிவியல், தொழில்நுட்பம், சமூகம், வரலாறு, இலக்கியம், சுற்றுச்சூழல், மருத்துவம், உடல்நலம் போன்ற துறைகளின் கட்டுரைகள் அதிகமாக வர ஆரம்பித்தால் இந்நிலை மாறலாம். சினிமா, பொழுதுபோக்கு தவிர்த்து மற்ற துறைகளில் பதிவுகள் வரவேண்டுமென்றால் அத்துறையைச் சார்ந்தோர் தமிழில் பதிவெழுத ஆரம்பிக்க வேண்டும் . பெரும்பாலானோர் யார் படிப்பார்கள் என்றோ தமிழில் எழுத வேண்டுமா என்றோ நினைத்து , தங்கள் துறை சார்ந்த விசயங்களைப் பதிவு செய்யத் தயங்குகின்றனர் . ஆரம்பத்தில் வாசகர்கள் சிறிய அளவில் இருந்தாலும் போகப் போ க வாசகர் வட்டம் விரிவடையும் . மின்தமிழ் http://groups.google.com/group/mintamil போன்ற கூகுள் குழுமங்களில் இணைவதன் மூலம் பல்துறையைச் சேர்ந்த தமிழார்வலர்களிடம் விவாதிக்கும் வாய்ப்பு கிடைக்கும்.

## தமிழ்ப் பதிவுலகமும் சர்ச்சைகளும்...



நம் கருத்துகளைப் பதிவாக வெளியிட்டுப் பொதுவில் (திரட்டிகளில் இணைத்தல் ) வைக்கும் பொழுது கருத்து மோதல்கள் வர வாய்ப்புண்டு . சர்ச்சைக்குரிய விசயங்களை விவாதிக்கும் பொழுது கருத்து மோதல்கள் வரும் வாய்ப்பும் உண்டு . அப்படி விவாதங்கள் வரும் பொழுது விவாதப்பொருளுக்குப் பதிலிடுவதும் தன் கருத்துகளை வெளியிடுவதும் பதிவுலகின் சுவாரஸ்யங்களில் ஒன்று.

ஆனால், விவாதங்கள் தனி மனிதத் தாக்குதலாக மாறாமல் இருப்பது வலைப்பதிவரின் கடமை . சிலசமயம் தமிழ்த் திரட்டிகளைப் பார்க்கும் பொழுது காட்டமான விவாதங்கள் , கருத்து மோதல்களைப் பார்வையிட நேரலாம். தமிழ்ப் பதிவுலகமே இப்படித்தான் என்று நினைத்து தமிழில் பதிவெழுதுவதை தவிர்ப்பது நல்லதல்ல.

சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லில் பயனிலாச் சொல்

என்ற வள்ளுவன் வாக்கைக் கடைப்பித்தாலே போதுமானது.

## பதிவுலகம் எங்கே செல்கிறது?

சில காலம் வரைக்கும் சாமான்யரின் கருத்துகளின் தளமாக இருந்த பதிவுலகம் இன்று சம ஊடகம் (Parallel Media) என்ற நிலையை எடுக்க ஆரம்பித்துள்ளது. முன்பெல்லாம் செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து வந்த ஊடகங்கள் இன்று பிரபலங்களில் வலைப்பதிவுகளையும், குறுஞ்செய்திகளையும் பார்வையிட ஆரம்பித்துள்ளன.

பிரபலங்களும் தங்கள் கருத்துகளை வெளியிடும் ஊடகமாக பதிவுத்தளங்களைப் பயன்படுத்துகின்றனர். ஆங்கிலச் செய்தித்தளங்கள் தங்கள் செய்தியாசிரியர்களுக்கு என தனியாக பக்கங்களையும் துவங்கியிருக்கின்றன. ஒவ்வொரு ஆசிரியரும் தங்கள் வாசகர்களிடம் விவாதிக்க ஆரம்பித்திருப்பது நொடிக்கு நொடி கருத்துகளைப் பெற உதவுகின்றன.

சமூக ஊடகங்களை (Social Media) எப்படிப் பயன்படுத்துவது என்பதே இன்று பெரும்பாலான நிறுவனங்களின் எண்ணமும் . முன்பு விளம்பரங்களைப் பார்த்து ஒரு பொருளை வாங்கினோம் என்றால் இன்று நம்பிக்கையானவர்களின் கருத்தைக் கேட்டே வாங்குகிறோம் . அந்த நம்பிக்கைக்குரிய இடத்தில் பதிவர்களும் இருப்பதை தனியார் நிறுவனங்கள் உணரத் துவங்கியுள்ளதே சமூக ஊடக நிறுவனங்கள் புற்றீசல் போல

அதிகரிக்கக் காரணம். ஒரு பொருள் எந்த அளவுக்கு பிளாகர், ஃபேஸ்புக் போன்ற தளங்களில் விவாதிக்கப்ப டுகிறதோ அந்த அளவுக்கு நிறுவனங்கள் விளம்பரத்துக்கான செலவைக் குறைத்துக் கொள்ளலாம் . கூகுள் வழியாகவும், இணையதள விளம்பரங்கள் மூலமாக வாடிக்கையாளர்களைச் சென்றடைய நினைத்த பன்னாட்டு நிறுவனங்கள் இன்று பிளாகர், ஃபேஸ்புக் போன்ற சமூக ஊடகங்களின் வாய்வார்த்தையை (Word or Mouth) நம்ப ஆரம்பித்துள்ளனர்.

இப்பொழுது ஆங்கில பதிவுத்தளங்களைப் பார்வையிட ஆரம்பித்துள்ள வணிக நிறுவனங்கள் சில ஆண்டுகளில் வட்டார மொழிகளையும் பார்வையிட ஆரம்பிப்பார்கள். அப்படி பார்வையிட ஆரம்பிக்கும் பொழுது நம் மொழியிலும் தொழில்நுட்பம், வணிகம், சந்தை, நுகர்வோர் பொருட்கள் என்று பலவற்றைப் பற்றியும் சிறந்த ஆய்வுகள் , விவாதங்கள் எல்லாம் வந்தால் நல்லது. ஆங்கிலத்தில் பதிவெழுதிய மூத்த பதிவர்கள் பலர் இன்று சொந்தமாக சமூக ஊடக நிறுவனங்களை ஆரம்பித்துள்ளது இங்கே கவனிக்கத்தக்கது.

முன்பு வெளிநாட்டுச் செய்திகள் , விசயங்களை நாளித ழ்களில் மட்டுமே படிக்க முடியும். ஆனால் இன்று உலகெங்கும் உள்ள தமிழர்கள் அந்தந்த ஊரில் நடக்கும் விசயங்களை, வாழ்வியல் முறையை பதிவேற்றுகிறார்கள் . பல பதிவர்கள் தன் எழுத்தாளுமையால் பத்திரிகையாளராகவும் எழுத்தாளர்களாகவும் ஆகியுள்ளனர்.

பதிவுலகம் கருத்துச் சுதந்திரம் , வணிகம், எழுத்தாளுமை, மொழியாற்றல், வாழ்வியல் என பலமுகங்களைக் கொண்டுள்ளது. நாம் எதை எடுக்கிறோம் என்பது அவரவர் கையில் உள்ளது . எந்த வழியைத் தேர்ந்தெடுதாலும் தமிழில் எழுத ஆரம்பித்தால் தமிழ் மொழி மீது பற்றும் ஈடுபாடும் வளர ஆரம்பிக்கும் என்பது மிகையில்லை!